இருக்கின்ற ஐம்பதாயிரத்திற்கும் மேற்பட்ட கால்நடைகளுக்காக கல்வாசலில் ஒரு கால்நடை மருத்துவமனையை இந்த அரசு அமைத்துத் தருமா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை பராமரிப்புத் துறை அந்தந்தப் பகுதியில் உள்ள கால்நடைகளின் எண்ணிக்கையைப் பொறுத்து அப்பகுதியில் கால்நடைக் கிளை நிலையம், கால்நடை மருந்தகம், கால்நடை மருத்துவமனை போன்றவற்றை அமைத்துத் தருகிறது. ஒரு கிராமத்தில் கால்நடைகளின் எண்ணிக்கை மூன்றாயிரத்திற்கும் மேல் இருக்குமானால் அங்கு ஒரு கால்நடைக் கிளை நிலையமும், பத்தாயிரத்திற்கும் மேல் இருக்குமானால் கால்நடை மருந்தகமும் அமைத்துத் தரப்படுகிறது. கால்நடைக் கிளை நிலையம் அமைக்கும் ஒரு இடத்திற்கும் ஏற்கெனவே அப்பகுதியில் செயல்பட்டு வரும் கால்நடைக் கிளை நிலையத்துக்குமிடையே 5 கி.மீ. தொலைவு இருத்தல் வேண்டும். மருந்தகம் அமைக்க வேண்டுமாயின் 6 கி.மீ. தூரம் இருக்க வேண்டும். கால்நடை மருத்துவமனை துவங்கப்பட வேண்டுமானால் தினசரி சிகிச்சைக்கு வரும் கால்நடைகளின் எண்ணிக்கை 40—க்கும் கூடுதலாக இருக்க வேண்டும். மேற்படித் தகுதிகள் இருப்பின், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை எதிர்காலத்திலே, நிதிநிலையை அனுசரித்து முன்னுரிமை அடிப்படையிலே பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 26, மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. தண்டபாணி, மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

26—

வட்டாட்சியர் அலுவலகம்

***63294—திரு. மா. தண்டபாணி:**

மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2010 ஏப்ரல் 7]

வேடசந்தூர் தொகுதியில் புதியதாக வட்டாட்சியர் அலுவலகம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையைக் கொடுக்கின்றேன். வேடசந்தூர் வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் புதிய கூடுதல் கட்டடம் கட்டுவது தொடர்பான கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. தண்டபாணி, இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர்,

திரு விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது நமது வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுடைய சொந்த மாவட்டம். தண்டபாணி அண்ணன் அவர்களுடைய நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று முன்னுரிமை அளித்து இந்த ஆண்டு கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதைப்போல, காங்கேயத்திலே வட்டாட்சியர் அலுவலகம் 20 ஆண்டுகளாகப் பழமையான கட்டடத்தில் இயங்கி வருகிறது. காங்கேயம் வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டித் தருகிற செயற்குறிப்பு அரசிடம் இருக்கிறதா என்று அறிய விரும்புவதோடு, இந்த ஆட்சி பொறுப்பேற்றுக் கொண்ட இந்த நான்கு ஆண்டு காலத்திலே எத்தனை வட்டாட்சியர் அலுவலகங்கள் புதிதாகக் கட்டப்பட்டிருக்கின்றன, இன்னும் எதிர்காலத்திலே எத்தனை வட்டாட்சியர் அலுவலகங்கள் புதிதாகக் கட்ட திட்டம் இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

முற்பகல் 10–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஐந்தாவது முறையாக தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்று, இந்த நான்கு ஆண்டு காலத்திலே

[2010 ஏப்ரல் 7

இதுவரை 30 புதிய வட்டாட்சியர் அலுவலகங்கள் கட்டுவதற்காக ரூ.45 கோடிக்கு மேலாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அவை கட்டி முடிக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. புதிய கட்டடங்கள் கட்டுவதற்கான செயற்குறிப்பும் அரசுக்கு வந்திருக்கிறது. தலைவர் கலைஞர் அவர்கள் இதுவரை கட்டடங்கள் கட்டுவதற்காக வருவாய்த் துறைக்கு ஒவ்வோர் ஆண்டும் அதிகமான நிதியை ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். இதுவரை இல்லாத அளவிற்கு குறிப்பாக, கடந்த நான்கு ஆண்டுக் காலத்திலே புதிய 16 வட்டாட்சியர் அலகுகளை உருவாக்கியவர் மாண்புமிகு முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்கள் என்பதை நான் இந்த அவைக்குப் பெருமையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். முதல் ஆண்டிலேயே ஏழு பழமையானக் கட்டடங்களைப் புதுப்பிப்பதற்காகப் பணிகள் எடுக்கப்பட்டு முடிக்கப்பட்டிருக்கின்றன. தொடர்ந்து ஒவ்வோர் ஆண்டும் பழமையானக் கட்டடங்களைப் புதுப்பித்துக் கட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. காங்கேயத்தைப் பொறுத்த அளவில் அரசுக்கு செயற்குறிப்பு வந்தால், நிச்சயமாக அதை அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி டி. யசோதா.

திருமதி டி. யசோதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வளர்ந்து வருகின்ற தொழில் நகரமாக இருக்கின்ற ஸ்ரீபெரும்புதூரில், வட்டாட்சியர் அலுவலகம் மிகப் பழமை வாய்ந்த கட்டடத்தில், வசதியற்ற சூழ்நிலையில் மிகக் குறுகிய இடத்திலே இருந்து கொண்டிருக்கிறது. நல்ல மேம்பாட்டுடன் வசதிகள் இருக்கக்கூடிய அளவிற்கு ஒரு வட்டாட்சியர் அலுவலகத்தைப் புதிதாக உருவாக்கித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை உங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 100, 120 ஆண்டுகள் கடந்த பழமையான வட்டாட்சியர் அலுவலகங்களுக்குத்தான் first preference, அதாவது முன்னுரிமை கொடுக்கப்பட்டு முதல் ஆண்டிலேயே எடுத்து கட்டப்பட்டிருக்கின்றன. 100 ஆண்டுகள், 120 ஆண்டுகள்

2010 ஏப்ரல் 7]

பழமையான வட்டாட்சியர் அலுவலகக் கட்டடங்கள் கன்னியாகுமரி, திருநெல்வேலி, கடலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களின் பல பகுதிகளிலே கண்டறியப்பட்டு, அவை புதியதாகக் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன. வருகின்ற காலத்திலும் நம்முடைய, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியதைப்போல அது பழமையான கட்டடமாக இருந்தால் அரசின் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. இராஜ்குமார்.

திரு. ம. இராஜ்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்டத் தலைநகரமான பெரம்பலூரிலுள்ள வட்டாட்சியர் அலுவலகம் மிகவும் பழமையானக் கட்டடத்திலே இயங்கி வருகிறது. அருகேயுள்ள வேப்பந்தட்டை மற்றும் வேப்பூர் ஒன்றிய அலுவலகங்கள் புதிய கட்டடத்தில் இயங்கும்போது மாவட்டத் தலைநகரமான பெரம்பலூரில் உள்ள கட்டடம் மிகவும் பழமையானக் கட்டடமாக இருப்பதால், அங்கு புதிய கட்டடம் அமைத்துத் தர அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஐந்தாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் ஏற்கெனவே அரியலூர், பெரம்பலூர் மாவட்டங்களைப் பிரித்து, புதிய அரியலூர் மாவட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்து கட்டடப் பணிகள் மிக விரைவாக நடந்து வருகின்றன. பெரம்பலூர் மாவட்டத்தில் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு என்று தனியாகக் கட்டடம் வேண்டுமென்று கேட்டிருக்கிறார். அதுபற்றி அரசு எதிர்காலத்திலே பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 27, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி, மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.